
# சஞ்சிகை

ஹே விளம்பி | ஐப்பசி | நவம்பர் 2017



Q PROMOS
Group

சஞ்சிகை சிற்றிதழ்
மேன்மேலும் சிறப்புற வாழ்த்தும்....

# ஆதன்

## பல் மருத்துவமனை

Dr.M.**ராஜண்ணா** B.D.S (reg no: 8380)

**முகவரி**
*377, புதிய நத்தம் சாலை.*
*ரிசர்வ் லைன், மதுரை14.*
*பேசி : 9884440880, 0452 4506090*
email : rajanna.dr@gmail.com

இதழ்கள்
நூல்கள்
பிரசுரங்கள்
வடிவமைக்க...

98416 99579

# சஞ்சிகை

மாத இதழ்

தனிச்சுற்றுக்கு மட்டும்

இதழ்:31 | ஐப்பசி
ஹே விளம்பி 2045
நவம்பர் 2017

**ஆசிரியர்**
கோ.முருகராஜ்

**ஆசிரியர் குழு**
அருண் நெடுஞ்செழியன்
சித்திரவீதிக்காரன்
பிரபு ராஜேந்திரன்
பா.உதயகுமார்
சு.ரகுநாத்

**அட்டைப்பட ஓவியம்**
சுபாஷ் சந்தர்

**இதழ் வடிவமைப்பு**
மெய்யருள்



**முகவரி**
*சஞ்சிகை,*
12/6-2, இரண்டாவது தெரு,
எஸ்.வி.பி.நகர், எஸ்.ஆலங்குளம்,
மதுரை 625017

தொடர்புக்கு
95007 80688

**மின்னஞ்சல்**
sanjigai@gmail.com

**வலைப்பூ**
www.sanjigai.wordpress.com

**ஃபேஸ்புக் பக்கம்**
https://www.facebook.com/sanjigai



**நன்கொடை**
தனி இதழ் ரூ.20.00
ஆண்டுச்சந்தா ரூ.200.00


## உள்ளே


- நவோதயா பள்ளிகள்
- காட்ஃபாதர் உருவான விதம்
- பிட்காயின்கள் ஒரு எளிய அறிமுகம்
- கிராமத்து சிறுவனின் நினைவலைகள்
- சுற்றுசூழல் பற்றிய சோவியத் சிந்தனைகள்
- நாத்திகள்
- அறியப்படாத தமிழகம்
- தமிழகம் அறிய வேண்டிய புத்தகம்
- பஞ்சு மிட்டாய் பக்கம்




# நவோதயா பள்ளிகள்

**லீனஸ்**

நீட் தேர்வுக்கு எதிரான போராட்டங்கள் தமிழகத்தில் ஓயாது நடந்து கொண்டிருக்கும் காலகட்டத்திலேயே மற்றுமொரு தாக்குதல் கல்வித் துறையின் மீது நடந்தேறியுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை தமிழகத்தில் நவோதயா பள்ளிகளை தொடங்கலாம் என்று அனுமதி அளித்து ஏறத்தாழ 30 ஆண்டுகள் நவோதயா பள்ளிகள் தொடங்க இருந்த தடையை விலக்கியுள்ளது. நவோதயா பள்ளிகள் என்றால் என்ன? ஏன் 30 ஆண்டுகளாக இப் பள்ளிகளைத் தொடங்கத் தடை இருந்தது? சொற்பமான கட்டணத்தில் தரமான கல்வி என்று கூறும் நவோதயா பள்ளிகளை வரவேற்காமல் நாம் ஏன் அதை எதிர்க்க வேண்டும். சற்று விரிவாகப் பாப்போம்.

**நவோதயா பள்ளிகள்**

*ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது 1986 இல் புதியக் கல்விக் கொள்கை வகுக்கப்பட்டது. அந்நிய முதலீட்டுக்கு இந்தியாவின் கதவுகளை திறந்துவிடுவதற்கு முன்னோட்டமாக அந்நிறுவனங்களில் பணிபுரிய மனித வளத்தை உருவாக்கும்*

விதமாக இருந்தது அந்தக் கல்விக் கொள்கை. அறிவுசார் கல்வித் திட்டத்தை மாற்றி வேலைவாய்ப்பினை மட்டும் குறி வைத்த திறன்சார் கல்வி திட்டமாக மாற்ற பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி உயர்கல்வியில் சுயநிதி கல்லூரிகள், நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாகத்தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் நவோதயா பள்ளிகள் என்ற உண்டு உறைவிடப் பள்ளி தொடங்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. சி.பி.எஸ்.இ பாடத் திட்டம் கொண்டு கற்பிக்கப்படும் இப்பள்ளிகள் மத்திய அரசின் மனித வளத்துறையின் கீழ் நேரடியாக இயங்குகிறது. 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள இந்தப் பள்ளிகளில் நுழைவுத்தேர்வு மூலம் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு மிகச் சொற்பமான கட்டணம் மட்டுமே மாணவர்களிடம் வசூலிக்கப்படுகிறது. இப்பள்ளிகளில் உள்ள இடங்களில் மொத்தம் 75 சதவீதம் கிராமப்புற மாணவர்களுக்கும் குறைந்த பட்சம் 22.5 சதவீதம் இடங்கள் தாழ்த்தப்பட்ட பழங் குடியின மாணவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தியாவில் மொத்தம் 589 நவோதயா பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

1989ல் நவோதயா பள்ளிகளை தமிழகத்தில் தொடங்க கடும் எதிர்ப்பு கிளம்பியதையொட்டி தமிழகத்தில் மட்டும் இப்பள்ளிகள் திறக்கப்படவில்லை. ஏறத்தாழ 30 ஆண்டுகள் கழிந்த நிலையில் தற்போது மீண்டும் நவோதயா பள்ளிகளை திறக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிராமப்புற மாணவர்களுக்கு ஒதுக்கீடு, தாழ்த்தப்பட்ட பழங்குடியின மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு, மிகச் சொற்ப கட்டணத்தில் கல்வி, தனியார் பள்ளிகளுக்கு நிகரான உட் கட்டமைப்பு, திறன் வாய்ந்த ஆசிரியர்கள், நல்ல தேர்ச்சி விகிதம் என்று பல நன்மைகளை கொண்டிருக்கும் நவோதயா பள்ளிகளை நாம் ஏன் எதிர்க்க வேண்டும். மிகவும் பயனுள்ள திட்டம்தானே என்ற கேள்வி எழலாம்.

### நுழைவுத் தேர்வின் அடிப்படையில் மாணவர் சேர்க்கை

நவோதயா பள்ளிகளில் மாணவர் சேர்க்கை பத்தே வயது நிரம்பிய மாணவர்களுக்கு நுழைவு தேர்வு வைப்பதன் அடிப் படையில் நடக்கிறது. இந்த மாணவர் சேர்க்கையைப் பற்றி 2015 ல் நிதி ஆயோக் நவோதயா பள்ளிகளை பற்றி நடத்திய ஆய்வில் என்ன கூறுகிறது. மாணவர் சேர்க்கையில் வெளிப்படைத்தன்மை

இல்லையென்றும் மாணவர் சேர்க்கை வழிமுறை நுழைவுத் தேர்வு பயிற்சி பெற வசதியுள்ள மாணவர்களுக்கு சாதகமாக இருப்பதாகவும் சுட்டிக் காட்டுகிறது அந்த அறிக்கை. மேலும் நவோதயா பள்ளிகளில் கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு உள்ள போதிலும் இப்பள்ளிகளை பற்றிய தகவல் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடையாதலால் பாதிக்கும் மேற்பட்ட மாணவர்கள் பள்ளி அருகாமையில் உள்ளவர்களாகவும் வசதி படைத்தோராகவுமே உள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

மேலும் நீட் விவகாரத்திலே நுழைவுத் தேர்வு எவ்வாறு சமூக நீதிக்கு எதிரானது என்பதை நாம் உணர்தோம். வசதிவாய்ப்பு பெற்றவர்களுக்கு சாதகமாகவும் அது மறுக்கப்பட்டவர்களுக்கு எதிராகவும் தான் உள்ளன இந்த நுழைவுத் தேர்வுகள். அதிலும் பத்தே வயது நிரம்பிய குழந்தைக்கு நுழைவுத் தேர்வு வைப்பது குழந்தைகள் மீது ஏவப்படும் மோசமான உளவியல் வன்முறை ஆகும். தொடக்கல்வியில் சிறந்து விளங்கா மாணவர்கள் பிற்காலத்தில் உயர்கல்வியில் சிறந்து விளங்கியதை நாம் கேள்வியே பட்டதில்லையா. அவ்வாறிருக்க 10 வயது குழந்தைகளை தரம் பிரிப்பது எப்படி சரியாகும்.

**சமமற்ற நிதி ஒதுக்கீடு**

அரசு செலவினங்களை கணக்கில் கொண்டால் நவோதயா பள்ளிகளில் படிக்கும் மாணவருக்கு தலா 85 ஆயிரமும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் படிக்கும் மாணவருக்கு 27000 ரூபாயும் தமிழக அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஒரு மாணவருக்கு ஏறத்தாழ 14000 ரூபாய்க்கும் குறைவாகவே செலவழிக்கிறது. சில மாநிலங்களில் ஒரு மாணவருக்கு 5000க்கும் குறைவாகவே செலவழிக்கிறது அரசு. நாடெங்கிலும் உள்ள 589 நவோதயா பள்ளிகளுக்கு மட்டும் 2015 ஆம் ஆண்டு 2250 கோடிகளை அரசு செலவிட்டுள்ளது. ஏன் இத்தகைய ஏற்றத்தாழ்வு? அனைவருக்கும் தரமான சமச்சீரான கல்வி தர வேண்டிய அரசே மாணவர்களை இப்படி தரம் பிரித்து வெறும்1 சதவீதத்துக்கும் குறைவான மாணவர்களுக்கு மட்டும் நிறைய நிதி ஒதுக்கீடு செய்து தரமான கல்வி அளிப்பேன் என்று கூறுவது எப்படி நியாயமாகும்.

நிதி ஆயோக் ஆகஸ்டு மாதம் அடுத்த 3 ஆண்டுக்கான வரைவு திட்டம் ஒன்றினை தயார் செய்து சமர்ப்பித்தது. குறிப்பாக கல்வித்துறையில் முக்கியமான சில மாற்றங்களை

அதில் பரிந்துரை செய்திருந்தது. அதன்படி, சரியாக இயங்காத போதிய அளவு ஆசிரியர் இல்லாத மாணவர்கள் சேர்க்கை மிகவும் குறைவாக உள்ள முறையாக வகுப்புகள் நடக்காத அரசுப் பள்ளிகளை படிப்படியாக தனியார் மயப்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது. தற்போது உள்ள அரசுப் பள்ளிகளில் 36 சதவீதம் இவ்வாறாக உள்ளதாகவும் கூறுகிறது. நவோதயா பள்ளிகள் மூலம் தனியார் பள்ளிகளை விடவும் சிறப்பான கல்வி அளிக்க முடியும் என்று மார்தட்டும் அரசு ஏன் தரமற்ற பள்ளிகள் என்று கூறி பெரும்பாலான அரசுப் பள்ளிகளை தனியார் மயப்படுத்த முயல்கிறது? இச்சமயத்தில் நாம் இன்னொன்றையும் நினைவில் கொள்ள வேண்டும். தொடக்கக் கல்வி என்று வரும் போது அரசுப் பள்ளிகளை விட்டு தெறித்து ஓடும் பணக்கார நடுத்தர வர்க்கம் உயர்கல்வி என்று வரும் போது மட்டும் அரசுக் கல்லூரிகளில் சேர்வதையே விரும்புகின்றனர். குறிப்பாக மருத்துவம், பொறியியல், சட்டம்,மேலாண்மை போன்ற படிப்புகளுக்கு அரசுக் கல்லூரிகளில் தான் தரமான கல்வி கிடைக்கும் என்று நம்புகின்றனர். இதையும் படிப்படியாக தனியார்மயப் படுத்த அரசு திட்டமிட்டுள்ளது என்பது வேறு விஷயம். ஆக அரசுக் கல்லூரிகளையும் நவோதயா பள்ளிகளையும் சிறப்பாக நடத்தக் கூடிய அரசினால் ஏன் அதே போன்று எல்லா அரசுப் பள்ளிகளையும் நடத்த முடியவில்லை? நவோதயா பள்ளிகளில் தரம் வாய்ந்த கல்வி அளிக்கப்படும் என்று கூறும் அரசு தான் அரசுப் பள்ளிகளில் தரம் சரியில்லை என்று கூறி அதை தனியார்மயப்படுத்த முயல்கிறது.

இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. பிரச்சனை அரசுப் பள்ளிகள் என்ற அமைப்பில் இல்லை. மாறாக அதை சீரமைக்க விரும்பாத அரசின் கொள்கையே இதற்கு காரணம். அரசுப் பள்ளிகளுக்கு போதிய நிதி ஒதுக்கி சிறந்த உட்கட்டமைப்பு வசதி செய்து கொடுத்து ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து சிறந்த முறையில் பள்ளிகளை இயங்க வைக்க முடியும். ஆனால்அப்படி எல்லா பள்ளிகளின் தரத்தையும் உயர்த்தாது சொற்பமான பள்ளிகளுக்கு மட்டும் அதிக அளவில் ஒதுக்குவது என்பது பெரும்பான்மையான அடித்தட்டு மக்களுக்கு கல்வியை மறுப்பதன்றி வேறு என்னவாக இருக்க முடியும் .

**காவிமயமாகும் கல்வி**

30 ஆண்டுகளுக்கு முன்னர் நவோதயா பள்ளிகளை அறிமுகப்படுத்த மத்திய அரசு முயன்றபோது முக்கியமாக

வைக்கப்பட்ட வாதங்களுள் ஒன்று நவோதயா பள்ளிகளில் கற்பிக்கப்படும் சமூக அறிவியல் பாடத்திட்டத்தில் தமிழ்நாடு சார்ந்த வரலாறு, பண்பாடு எதுவுமே இருக்காது என்பதாகும். அது போக, பாடப்புத்தகங்களை தயாரிக்கும் NCERT அமைப்போ, கல்வியை தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ் இசைவுக்கு ஏற்ப பாடப் புத்தகங்களை மாற்றி வருவதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

2014ல் பதவியேற்ற பின் மத்திய மனிதவளத்துறை அமைச்சகம் பள்ளிகல்வியை "இந்திய" (காவி) மயமாக்கி மாணவர்களுக்கு தேசப்பற்றையும் பெருமையையும் ஊட்ட வேண்டும் என்று வெளிப்படையாகக் கூறியது. அதன்படி பாடபுத்தகங்களையும் மாற்றி வருகிறது. உதாரணமாக, கிறித்தவர்கள், இஸ்லாமியர்கள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் சுதந்திரப் போர் என்பது இஸ்லாமியர்களுக்கு எதிரான போர் என்று பொருள் படும்படி பாடப்புத்தகங்களை திருத்தி அமைத்துள்ளது. 8,9,10 ஆம் வகுப்பு பாடத்திட்டங்களில் வேதங்களும், உபநிடதங்களும் பாடப்புத்தகங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. இது போன்ற தமிழகத்தின் வரலாற்றுக்கு தொடர்பில்லாத காவி மயமாக்கப்பட்ட கல்வி தான் இப்பள்ளிகளில் வழங்கப்படும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**சைனிக் பள்ளிகள் போன்று மாற்றப்படும் நவோதயா பள்ளிகள்**

கடந்த ஜூலை 18 ஆம் தேதி மத்திய மனிதவளத்துறை அமைச்சகம் நடத்திய கூட்டத்தில் பிரதமர் அலுவலகம் சில பரிந்துரைகளை முன் வைத்தது. அதன்படி, பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள சைனிக் பள்ளிகளில் உள்ள கல்வி முறையை போன்று மத்திய அரசின் கேந்திரிய பள்ளிகளிலும் நவோதயா பள்ளிகளிலும் அறிமுகப்படுத்துமாறு அறிவுறுத்தியது. அதன்படி மாணவர்களுக்கு உடற்பயிற்சியை கட்டாயமாக்கி தனிமனித ஒழுக்கம், தேச பக்தி ஆகியவற்றுக்கு தனிக் கவனம் கொண்டு பாடத் திட்டத்தில் அறிமுகப்படுத்த வேண்டும் என்று கூறியது. கூட்டத்தின் முடிவில் மத்திய அமைச்சர் மகேந்திர நாத் "இது மாணவர்களை மேலும் நாட்டு பற்று உடையவர்களாகவும் தேசிய உணர்ச்சி உடையவர்களாகவும் மாற்றும்" என்று கூறினார். தேசிய உணர்ச்சி என்ற பெயரில் பாசிச உணர்வினை மக்களுக்கு ஊட்டி அரசு துணையுடன் வன்முறை அரங்கேறிக் கொண்டிருக்கும் இந்தக் காலக்கட்டத்தில் பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களுக்கு இது போன்ற உணர்வுகளை ஊட்டி வளர்ப்பது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும்.

*மேலும் ஒழுக்கம் கட்டுப்பாடு என்ற பெயரில் ஆணாதிக்க சிந்தனையே குழந்தைகளின் மனதில் விதைக்கப்படும். ஆக ஆர்.எஸ்.எஸ் ஷாக்காக்கள் போல இப்பள்ளிகளை செயல்பட அறிவுறுத்துகிறது மத்திய அரசு. அரசு மற்றும் தனியார் துறைகளின் அதிகாரத்தில் உட்காரக் கூடியவர்கள். இது போன்ற வெறுப்புணர்வோடு இருப்பது எத்தகைய பின்விளைவுகளை ஏற்படுத்தும்.*

*இவையனைத்தையும் கருத்தில் கொண்டு பார்த்தோமேயானால் , நவோதயா பள்ளிகளை அனுமதிப்பது என்பது சமூக நீதிக்கு எதிரானது; அனைவருக்கும் தரமான கல்வியை மறுத்து ஒரு சிறு பிரிவினருக்கு மட்டும் கல்வியை அளிக்கும் திட்டம் என்பது விளங்கும்.. அரசு மெல்ல தனது பாசிச முகத்தை காட்டி மக்களுக்குள் மத ஜாதிச் சண்டைகளை வளர்த்துவிட்டு வேடிக்கை பார்க்கும் இன்றைய காலக்கட்டத்தில் தேசிய வெறியூட்டும் காவியமயமாக்கப்பட்ட கல்வி என்பது மிகவும் ஆபத்தானதாகும். கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்றி கல்விக்கான நிதி ஒதுக்கீடை அதிகரித்து அனைத்து மாணவர்களுக்கும் தரமான இலவசக் கல்வியை அரசு அளிப்பதே இதற்கு தீர்வாக அமையும்.* ●

---

## கொசு கடிச்சிச்சு!

**சுட்டி தன்யஸ்ரீ**

ஒரு ஊர்ல ஒரு குட்டிப் பாப்பா இருந்தாளாம். அவளைக் கொசு ஒண்னு கடிச்சிச்சாம். கொசு கடிச்சதுல இரத்தம் கூட வந்திடிச்சு.

பாப்பா ரொம்ப அழ ஆரம்பிச்சிட்டாள். உடனே பக்கத்துல இருந்த சிங்கமும் புலியும் அவள்ட்ட வந்து,



அழாதே பாப்பா...

நாங்க உன்னைக் கடிக்கல, அந்தக் கொசுதான் கடிச்சதுன்னு சொன்னாங்களாம். அப்படியும் பாப்பா அழுகைய நிறுத்தவேயில்லை.

உடனே புலி, கொசுக்கு ஃபோன் செஞ்சிதாம். "ஏய் கொசு, ஏன் பாப்பாவை கடிச்ச? ஹ்ம்ம்.. இனிமே அப்படி செய்யக்கூடாது.. புரியுதா" ன்னு சொல்லிச்சாம்.

யானை, கரடி, தவக்களை எல்லாம் வந்து; "பாப்பா, அழாதே.. உனக்கு ஒன்னுமில்ல,எல்லா சரியாடு"ம்னு சொன்னாங்க. அப்புறம் அவளுக்கு சரியாடிச்சு. கொசுவும் வந்து சாரி கேட்டுடிச்சு...

---

**பெங்களூருவிலிருந்து வெளியாகும் குழந்தைகளுக்கான "பஞ்சுமிட்டாய்" மின்னிதழில் வெளியான குழந்தையின் படைப்பு.**



## காட்ஃபாதர் உருவான விதம்

# பிரான்சிஸ் ஃபோர்ட் கப்பாலோ

## நேர்காணல்

காட்ஃபாதர் திரைப்படத்தினை இதுவரையிலும் நம்மில் பலர் பலமுறை பார்த்திருக்கிறோம். வசீகரமான மாய கனவொன்றில் நுழைந்து சிறிது நேரம் உலாத்திவிட்டு மனமொப்பாது மீண்டும் இயல்புக்கு திரும்பும் உணர்வே ஒவ்வொருமுறை காட்ஃபாதரை பார்த்து முடிக்கும் போதும் ஏற்படும். காட்ஃபாதராக திரையில் நடமாடிய மர்லன் பிராண்டோவின் சிறுசிறு அசைவுகளும் பலரை வசீகரித்திருக்கின்றன. மிகப்பெரிய மாஃபியா கும்பலொன்றின் தலைவனாக அறிமுகமாகி, தன் குடும்பத்தின் மீதான அன்பினால் இறுதியில் தனது கட்டுறுதி குலைந்து சிறுபிள்ளைப்போல அழுகின்ற பிராண்டோவின் முகம் இப்போதும் நினைவில் தங்கியுள்ளது. அல் பாசினோ ராபர்ட் டி நிரோ என்ற மிகச்சிறந்த இரு நடிகர்களை அடையாளம் காட்டிய காட்ஃபாதர் திரைப்படம் உலகின் மிக முக்கியமான பல இயக்குனர்களையும் அதிக தாக்கத்துக் குள்ளாக்கியது.

இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த திரைப்பட மேதைகளில் ஒருவராக போற்றப்படும் அமெரிக்க இயக்குனரான பிரான்சிஸ் ஃபோர்ட் கப்பல்லோ, காட்ஃபாதர் திரைப்படத்தின் முதல் பாகத்தை உருவாக்க துவங்கியபோது அவருக்கு வெறும் 29 வயதுதான். மிகவும் இளையவரான கப்பல்லோ, ஸ்டுடியோக்களின் கட்டுப்பாட்டில் இருந்த ஹாலிவுட் சினிமாவில் தான் நினைத்ததைப்போல காட்ஃபாதரை எடுத்து முடிப்பதற்குள் எண்ணற்ற சிக்கல்களையும், போராட்டங் களையும் எதிர்கொள்ள நேர்ந்தது. எனினும், உறுதியுடன் அவைகளை அவர் எதிர்கொண்டார்.

சினிமா விமர்சகரான மார்வின் ஆர்.ஷங்கின் உடனான இந்த நேர்காணலில் காட்ஃபாதர் திரைப்பட உருவாக்கத்தின் பின்னணியை பேசியிருக்கிறார் கப்பல்லோ.

உலகில் படைக்கப்பட்ட மிகச் சிறந்த திரைப்படங்களில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததான காட்ஃபாதர் திரைப் படத்தை இயக்க பாரமௌன்ட் நிறுவனம் (Paramount Pictures) உங்களுக்கு முன்பாக 30க்கும் மேற்பட்ட இயக்குனர்களை அணுகியதாகவும், அவர்கள் அனைவருமே இப்படத்தினை இயக்க மறுத்துவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். உண்மையில் நடந்தது என்ன? காட்ஃபாதர் படத்தை இயக்கும் பொறுப்பு உங்களை வந்தடைந்தது எப்படி?

காட்ஃபாதர் படத்தை இயக்க 30க்கும் மேற்பட்ட இயக்குனர்கள் மறுத்தார்களா என்று தெரியவில்லை. ஆனால், உறுதியாக சிலர் மறுத்துவிட்டனர். காட்ஃபாதருக்கு ஓராண்டுக்கு முன்னதாக வெளியான தி பிரதர்ஹுட் (The Brotherhood) என்றொரு அப்படம் மிகப்பெரிய தோல்வியை தழுவியது. அதனால், மாஃபியா பின்னணியில் அமைந்திருந்த காட்ஃபாதர் திரைப்படத்தை இயக்கும் வாய்ப்பை பலரும் உதாசீனப்படுத்திவிட்டார்கள்.

பாரமௌன்ட் நிறுவனம், காட்ஃபாதர் நாவல் வெளி யாகியிருந்த உடனேயே அதனை அவர்கள் மிகக்குறைந்த பொருட் செலவில் தயாரிப்பதென்றும், பணத்தை அதிகம் விரயம் செய்யாமல் சிக்கனமாக கையாளத் தெரிந்த இளைஞர் ஒருவரை இயக்குனராக நியமிப்பது என்றும் முடிவு செய்திருந் தார்கள். பாரமௌன்ட் நிறுவனம் இரண்டு மில்லியனுக்கும் குறைவான பணத்தில் படத்தை தயாரிப்பதென்றும், இத்தாலி யரையோ அல்லது இத்தாலிய வம்சாவழியை சார்ந்த

ஒருவரையோ இயக்குனராக நியமிப்பதன் மூலம் நாவலில் விவரிக்கப்பட்டுள்ள குடும்ப உறவுகளை புரிந்துக்கொண்டு அதனை கையாள ஏதுவாக இருக்கும் என்று கருதினார்கள்.

என்னுடைய "யூ ஆர் எ பிக் பாய் நவ்" (You are a big boy now) படம் நியூயார்க்கில் சிறியளவில் வெற்றி அடைந்திருந்தது. அதோடு, அப்படத்தில் கையாளப்பட்டிருந்த புதிய கருவிகள், திரைப்பட உருவாக்கத்தில் பின்பற்றியிருந்த புதிய உத்திகள், அதிக செலவு இழுக்காத தெளிவான திட்டமிடல்களை பற்றியும் பரவலாக பேசப்பட்டது. எனக்கு அப்போது 29 வயது.

அப்போதுதான் பாராமௌன்ட் நிறுவனம் மேற்சொன்ன காரணங்களுக்காக காட்ஃபாதரை என்னை இயக்கச் சொல்லி அணுகியது. அதோடு அல் ரூடிதான் படத்தின் தயாரிப்பாளர் என்றும் தெரிவித்தது. ஆனால் நான் "தி கான்வர்சேஷனை" படமாக்க விரும்பினேன். இருப்பினும், தொடர் வற்புறுத்தலால் காட்ஃபாதர் நாவலை கையில் எடுத்துக் கொண்டேன். அதிலிருந்த சகோததர்களுக்கிடையிலான உறவு, தந்தையின் கதை மற்றும் மாஃபியா போன்ற சமாச்சாரங்கள் என்னை வசீகரித்தன. ஆனாலும், காட்ஃபாதரில் இடம்பெற்றிருந்த பெண்ணினது பகுதி மிகவும் சலிப்பூட்டக்கூடியதாக இருந்தது. நாவலில் உள்ள சுவாரஸ்யமான புள்ளிகளை மட்டுமாவது கையிலெடுக்க விரும்பினேன். அதனால், அதில் அடங்கியிருந்த மாஃபியா எனும் புள்ளியை கையிலெடுத்துக்கொண்டு, மாஃபியாக்கள் குறித்த தகவல்களை திரட்டத் துவங்கினேன்.

**அப்போது உங்களுக்கு மாஃபியா கும்பல்களை பற்றி எதுவும் தெரிந்திருக்க வில்லை இல்லையா?**

நிச்சயமாக எதுவும் அறிந்திருக்கவில்லை. நான் முன்னதாகவே சில போர் சார்ந்த திரைப்படங்களுக்கு திரைக்கதைகள் எழுதி யிருந்தாலும், அவைகளில் ஒரு நேர்த்தி இல்லாதிருந்தது. அதனால், இம்முறை கவனமாக திரைக்கதையை கையாள வேண்டுமென்று முடிவெடுத்தேன். நூலகத்திலிருந்து மூன்று புத்தகங்களை எடுத்து வந்து வாசிக்க தொடங்கினேன்.

**அந்த புத்தகங்களை இப்போதும் நினைவு வைத்திருக்கிறீர்களா?**

ஆம். அவை நியூயார்க் நகரில் வேர்விட்டிருந்த மாஃபியா கும்பல்களை பற்றிய புத்தகங்கள். அதில் நியூயார்க்கில் மாஃபியா கும்பல்களின் வரலாறு விரிவாக விளக்கப்பட்டிருந்தது. அதோடு, சால்வடோர் மாரன்சானோ எனும் மிகப்பெரிய மாஃபியா



தலைவனின் கொலைப் பற்றியும் விவரிக்கப்பட்டிருந்தது. அந்த புத்தகத்தை எழுதியிருந்தவர் லக்கி லூஸியானா. அதோடு மேலும் சில மாஃபியா தலைவர்களைப் பற்றியும் அதில் விரிவாக எழுதப்பட்டிருந்தது.

அவை எல்லாமே வெவ்வேறான மாஃபியா கும்பல்களுக் கிடையிலான உறவினை ஆழமாக அலசியிருந்தன. மீண்டு மொருமுறை காட்ஃபாதர் நாவலை வாசிக்கத் துவங்கினேன். எனக்கு கிடைத்திருந்த குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு, ஒரு திரைக்கதை வடிவத்தை வரைந்தெடுத்தேன். அதோடு ஒவ்வொரு காட்சியைப் பற்றிய சிறுசிறு துணுக்குகளையும்,

*படத்தில் உள்ள மனிதர்களுக்கிடையிலான உறவினையும் உருவாக்கி வைத்துக்கொண்டேன்.*

**நாவலில் இருந்து எத்தனை தூரம் விலகி நீங்கள் உங்கள் திரைக்கதையை அமைத்தீர்கள்?**

*நான் காட்ஃபாதரை இயக்கியபோது நாவலையோ, அதில் இருந்த திரைக்கதையையோ பயன்படுத்தவில்லை. சேகரித்து வைத்திருந்த குறிப்புகளையே பயன்படுத்தினேன். ஒவ்வொரு சிறு துணுக்கையும் தேவைக்கேற்ப விரிவாக்கி, அதனை காட்சிகளாக மாற்றினேன்.*

**நான் ஒரு கட்டுரையில் காட்ஃபாதர் உருவாக்கத்தின் பின்னணியில் பாரமௌன்ட் நிறுவனத்தினர் பலரும் பங்குகொண்டதாக தகவல் ஒன்றை படித்தேன். அதில் எந்தளவுக்கு உண்மை இருக்கிறது?**

*உண்மைதான். அவர்கள் இரண்டு மில்லியனுக்கும் குறைவான தொகையிலேயே படத்தை எடுத்து முடித்துவிட வேண்டுமென்பதில் தீர்மானமாக இருந்தார்கள். ஏனெனில், அப்போதுதான் புத்தகம் வாசகர்களிடம் லேசான கவனிப்பை பெற்றிருந்தது. முதலில் உருவாக்கிய திரைக்கதை நிகழ் காலத்தில் நடைபெறுவதாக அமைக்கப்பட்டிருந்தது. காட்ஃபாதரை வரலாற்று படமாக அல்லாமல், நிகழ்காலத்தில் நடை பெறுவதைப்போல திரைக்கதையை அமைப்பதன் மூலமாக செலவுகளை அதிகளவில் குறைக்க முடியும். அதோடு உடைகள், செட்டுகள் என எதற்கும் அதிக மெனக்கெடல் தேவைப்படாது. ஆனால், நான் புத்தகத்தில் நடைபெறுவதைப்போல 40 களில் நடப்பதாகவே படத்தையும் இயக்க விரும்புவதாக ஸ்டுடியோக்காரர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் அதனை ஏற்கவில்லை. வரலாற்று படமாக இதனை உருவாக்கினால் இரண்டு மில்லியன்களை நிச்சயாக கடந்துவிடும் என்பதிலேயே நிலையாக நின்றிருந்தனர். நான் காட்ஃபாதரை கிளாசிக் தன்மையிலேயே உருவாக்க விரும்பினேன். அதேபோல, படத்தை நியூயார்க் நகரத்தில் படம்பிடிக்க வேண்டுமென்ற என் கோரிக்கையையும் ஸ்டுடியோவினர் நிராகரித்தனர். நியூ யார்க்கில் படம் பிடிப்பது அதிக பணத்தை இழுக்கும் என்று அவர்கள் தெரிவித்தனர்.*

**முக்கிய கதாபாத்திரங்கள் உருவான விதம் பற்றி கூறுங்கள்...**

*அதே தருணத்தில், நான் விட்டோ கார்லியோனின் கதா பாத்திரத்தை வடிவமைப்பத்தில் அதிக முனைப்புடன் ஈடுபட துவங்கினேன்.*



“காட்ஃபாதர் கதாப்பாத்திரத்திற்கு யாரைத் தேர்வு செய்திருக்கிறீர்கள்?” என்று கேட்டனர். நான் “உலகத்திலேயே மிகச்சிறந்த இரண்டு நடிகர்கள் லாரன்ஸ் ஆலிவரும், மர்லன் பிராண்டோவும்தான். ஆனால், மர்லன் பிராண்டோ இன்னும் இளையவராகவே இருக்கிறார். அவருக்கு வயது 47 தான். அதனால் நாம் ஏன் ஆலிவரை அணுகக்கூடாது” என்றேன். அதற்கு அவர்கள், “ஆலிவர் இனியும் நடிப்பதாக இல்லை. அவர் விரைவிலேயே இறந்து விடுவார்” என்றார்கள். “அப்போது நாம் மர்லன் பிராண்டோவை அணுகலாம்” என்றேன்.

பாரமௌன்ட் நிறுவனத்தினருடனான அடுத்த அமர்வில் நான் மர்லன் பிராண்டோவை முன் மொழிந்தேன். ஆனால், அவர்கள் “மர்லன் பிராண்டோ அப்போது இறுதியாக பர்ன் (Burn) என்றொரு படத்தில் நடித்திருந்தார். ஒருவேளை அவர் அதில் நடித்திருக்காவிட்டால், படம் சிறப்பாக வந்திருக்கும். அதனால் மர்லன் பிராண்டோவை காட்ஃபாதராக கற்பனை செய்து பார்ப்பதைக்கூட தவிர்த்துவிடுங்கள்” என்றனர்.

அதோடு,இன்னொரு அமர்வுக்கும் என்னை அழைத்திருந்தனர். அதில் பாரமௌன்ட் நிறுவனத்தின் முக்கியஸ்தர்கள் பலரும் இடம் பெற்றிருந்தனர். அவர்களின் பிரெசிடென்ட், “இந்த படத்தில் மர்லன் பிராண்டோ நிச்சயமாக இல்லை” என்று திடமாக சொன்னார். அதற்கு நான், “என்னை இயக்குனராக நியமித்திருக்கிறீர்கள். ஆனால், என் கருத்தை துளியும் நீங்கள் ஏற்பதில்லை. இப்போது நீங்கள் எனக்கு கட்டளையிடுகிறீர்கள்.

தயவுக் கூர்ந்து இந்த ஒன்றிலாவது என் பேச்சை கேளுங்கள்" என்று மன்றாடினேன்.

இறுதியாக அவர்கள் மர்லன் பிராண்டோ படத்தில் இடம்பெற வேண்டுமானால் மூன்று விஷயங்களை உடனடியாக செய்தாக வேண்டுமென்று தெரிவித்தார்கள். முதலாவது, காட்ஃபாதரில் படத்தில் நடிப்பதற்கு பிராண்டோவுக்கு சம்பளம் எதுவும் கொடுக்கப்படாது. இரண்டு, அவர் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். அதாவது, படப் பிடிப்புக்காக திட்டமிடப்பட்ட செலவு தொகை அவரால் விரயமாகுமானால், அதற்கு அவரே முழுப் பொறுப்பும் ஏற்று அந்த தொகையினை திருப்பிக்கொடுக்க வேண்டும். மூன்றாவது, அவர் ஸ்கிரீன் டெஸ்டிற்கு தன்னை உட்படுத்திக்கொள்ள வேண்டும்.

மூன்று கோரிக்கைகளில் எனக்கு பெரும் பிரச்சனையாக தெரிந்தது ஸ்கிரீன் டெஸ்ட்தான். அதனால், பிராண்டோவுக்கு போன் செய்து, "நாம் காட்ஃபாதர் கதாப்பாத்திரத்துக்கான ஒத்திகை ஒன்றினை நிகழ்த்திப் பார்க்கலாமா? சிறிய வீடியோ கேமரா ஒன்றில் அதனைப் பதிவு செய்து கொள்ளலாம், காட்ஃபாதர் கதாப்பாத்திரத்தை மெருகேற்ற அது பெரிதும் துணை புரியும்" என்றேன். இதுவொரு ஸ்கிரீன் டெஸ்ட் என்பதை அப்போது அவரிடம் தெரிவிக்கவில்லை. அவரும் உடனடியாக என்னை தனது வீட்டிற்கு வரும்படி அழைத்தார்.

நான் பிராண்டோ பற்றி அதிகம் படித்திருந்தேன். அதனால் என்னுடைய குழுவினரிடம், "பிராண்டோ அதிகம் சத்தத்தை விரும்ப மாட்டார். அவருக்கு இரைச்சல் துளியும் பிடிக்காது. அதோடு துளி சத்தமும் எழுப்பாமல் அமைதியாக நமது சம்பாஷனையினை நிகழ்த்துவோம்" என்று தெளிவுப் படுத்தியிருந்தேன். என்னிடம் மிகச்சிறிய கேமரா ஒன்று இருந்தது. நாங்கள் ஒரு காலைப்பொழுதில் லாஸ் ஏஞ் சல்ஸ் நகரிலிருந்த அவரது வீட்டின் கதவை தட்டினோம். முதிய பெண்ணொருத்தி வீட்டின் கதவை திறந்து எங்களை வரவேற்றார்.

நான் இத்தாலிய மாஃபியாக்கள் பயன்படுத்தக்கூடிய பல பொருட்களை என்னுடன் எடுத்துச் சென்றிருந்தேன். அவைகளை பிராண்டோவின் அறையில் பரப்பி வைத்துவிட்டு பதற்றத்துடன் காத்திருந்தேன். பிராண்டோ உறக்கத்திலிருந்து மெல்ல எழுந்து என் அருகே நடந்து வந்தார். நான், "காலை



வணக்கம் பிராண்டோ" என்றேன். அவர் தனது பாணியில், "ம்ம்ம்" என்றுவிட்டு தனது நாற்காலியில் அமர்ந்து சிகரெட் ஒன்றினை பற்றவைத்துவிட்டு, "ம்ம்ம்" என்றார்.

பிறகு, அவர் எழுந்து சென்று தன் தலை கேசத்தை வழித்து சீவினார். அதோடு, தன் ஷுக்களுக்கு பாலிஷ் செய்தார். அவர் தன் சட்டை காலரை சுருட்டியபடியே, "அவர்களின் சட்டை காலர் எப்போதும் சுருங்கியிருக்கும்" என்றார். அவர் மெல்ல காட்ஃபாதராக உருமாறிக்கொண்டிருந்தார். தன் மேல் கோட்டை அணிந்துக்கொண்டு சிகரெட் ஒன்றை பற்ற வைத்தார். நாங்கள் அனைத்தையும் படம் பிடித்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு சென்றோம். எப்படி 47 வயதுடையவரான பிராண்டோவால் காட்ஃபாதராக கச்சிதமாக உருமாற முடிந்திருந்தது என்று வியந்தபடியே அங்கிருந்து கிளம்பி சென்றோம்.

நான் நேராக லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலிருந்த சார்லியின் அலுவலகத்திற்கு சென்றேன். அவர்தான் பிராண்டோ கூடாது என்பதில் அதிக தீவிரத்துடன் இருந்தார். பிராண்டோவை அந்த வீடியோவில் பார்த்ததும் முதலில், "இது அவசியமில்லை.." என்று சொல்லிக்கொண்டே இருந்தவர். வீடியோ டேப் முழுவதும் முடிந்திருந்தபோது, "பிராண்டோதான் காட்ஃபாதருக்கான சரியான தேர்வு" என்றார். அவருக்கு பிறகு, பாரமௌன்ட் நிறுவனத்தை சேர்ந்த மேலும் ஐவரும் பிராண்டோவின் தோற்றத்தால் அசந்துப் போயிருந்தார்கள். அதனால்,

எல்லோருமே அவர் நடிப்பதற்கு சம்மதம் தெரிவித்தனர். மேலும், அவருக்கு சம்பள தொகை தருவதோடு, எந்த ஒப்பந்தத்திலும் அவர் கையெழுத்திட வேண்டிய அவசியமுமில்லை என்றும் தெரிவித்தனர்.

**அல்பசினோ – படத்திற்குள் எப்படி வந்தார்?**

மைக்கேல் கதாப்பாத்திரத்திற்கு ராபர்ட் ரெட்ஃபோர்டை சிபாரிசு செய்தனர். ஆனால், அவர் இத்தாலிய சாயலில் இல்லை என்று சொல்லி, அதனை நான் நிராகரித்துவிட்டேன். அவர்கள் தொடர்ந்து பல நடிகர்களை சிபாரிசு செய்தபடியே இருந்தனர். ஆனால், அதனை எதையும் நான் ஏற்கவில்லை. அல் பாசினோ என்பவர்தான் மிக சரியான தேர்வாக இருப்பார் என்று சொன்னேன். உடனே அவர்கள், "யார் அந்த அல் பாசினோ?" என்று கேட்டார்கள். நான், "அவர் ஒரு மிகச் சிறந்த நாடக நடிகர். இன்னும் திரைப்படங்கள் நடிக்கவில்லை. எனினும், மைக்கேல் கதாப்பாத்திரத்திற்கு அதிக நியாயம் சேர்க்கக்கூடியவர் அவராகத்தான் இருக்கும்" என்றேன். உடனேயே அவர்கள் அதனை மறுத்துவிட்டனர். காட்ஃபாதரில் அல் பாசினோ நிச்சயமாக இல்லை என்றார்கள் தீர்மானமாக.

சில நாட்கள் கழித்து, அல் பாசினோ நடித்து வெளியாகியிராத "தி பானிக்" (The Panic) என்ற படத்தின் சில காட்சிகளை பாரமௌன்ட் நிறுவனத்தினர் பார்த்திருந்தனர். அப்படத்தில் அல் பாசினோ சிறப்பாக நடித்திருப்பதாகவும், இனி அவர் காட்ஃபாதரில் நடிப்பதில் தங்களது பிரச்சனை எதுவும் இல்லை என்றும் தெரிவித்தனர்.

**காட்ஃபாதர் இரண்டாம் பாகத்தை பற்றி சொல்லுங்கள்?**

காட்ஃபாதர் (The Godfather (1972)) வெளியாகி, மிகப் பெரிய அளவில் வெற்றி அடைந்திருந்தது. அக்காலக்கட்ட திரைப்பட வரலாற்றிலேயே காட்ஃபாதர் அளவுக்கு வெற்றி அடைந்த படமென்று எதுவும் இருந்திருக்கவில்லை. காட்ஃபாதர் திரைப்படம் ஆஸ்காருக்கு பரிந்துரைக்கப்பட்டபோது, அது மிகச்சிறந்த திரைப்படத்துக்கான விருதினை பெற்றது. மிகச்சிறந்த இயக்குனருக்கான விருது கிடைக்கவில்லை. ஆனாலும், எனக்கு வேறு சில விருதுகள் கிடைத்திருந்தன. இதன்மூலம், நான் கொஞ்சம் வசதியானவனாகவே மாறியிருந்தேன்.


காட்ஃபாதர் முதல் பாகம் முடிந்ததுமே நான் அதிலிருந்து முழுவதுமாக விலகி விடுவதென்று முடிவு செய்திருந்தேன்.

மேலும் மேலும் மாஃபியாக்கள் குறித்து எதையும் ஆராய்ந்து கொண்டிருக்க நான் விரும்பவில்லை. ஆனால், சார்லி என்னிடம் "உங்களுக்கு சக்சஸ் பார்முலா தெரிந்திருக்கிறது, அதனால் இன்னொரு காட்ஃபாதரை செய்யுங்களேன்" என்றார். "காட்ஃபாதர் சரியான இடத்தில் நிறைவு பெற்றுவிட்டது, மேலும் அதிலிருந்து நீட்டித்து இழுக்க எதுவுமில்லை" என்று தீர்மானமாக சொல்லிவிட்டேன். மேலும், "நான் திறமையான இளைஞன் ஒருவனை பிடித்துத் தருகிறேன். பாரமௌன்ட் நிறுவனத்துடன் மீண்டும் இணைந்து வேலை செய்ய முடியாது" என்றேன். அதனால் நான் மார்டின் ஸ்கார்ஸசியின் பெயரை பரிந்துரைத்தேன். மேலும், திரைக்கதை உருவாக்கத்தில் அவருக்கு நானும் மேரியோ புஸோவும் உதவி புரிவதாகவும் சொன்னேன். ஆனால், அவர்கள் "நிச்சயமாக மார்ட்டின் ஸ்கார்ஸசி காட்ஃபாதர் இராண்டாம் பாகத்தை இயக்கப் போவதில்லை" என்று மறுத்துவிட்டார்கள். மீண்டும் என்னையே இயக்கும்படி வற்புறுத்தினார்கள். நிச்சயமாக நான்தான் அவர்களுக்காக காட்ஃபாதர் இரண்டாம் பாகத்தை இயக்க வேண்டுமானால், சில கோரிக்கைகளை தெரிவித்தேன். முதலாவது, நிச்சயமாக நான் கான்வர்சேஷன் படத்தை முடித்துவிட்டுதான் காட்ஃபாதரை கையிலேடுப்பேன் என்றேன். இரண்டாவது, எனக்கு சம்பளமாக ஒரு மில்லியன் டாலர்கள் கொடுக்க வேண்டும் என்றேன். அடுத்தது, படத்துக்கான முழு பட்ஜெட்டையும் நானே முடிவு செய்வேன் என்றேன். இறுதியாக, இந்த படத்தை "தி ரிடர்ன் ஆஃப் மைக்கேல் கார்லியோன்" (The Return of Michael carleone) என்று அழைப்பதற்கு பதிலாக, காட்ஃபாதர் இரண்டாம் பாகம் என்றே அழைக்கப்பட வேண்டும் என்றேன்.

அவர்களும் அதற்கு ஒப்புதல் தெரிவித்தனர். பிறகு, நான் திரைக்கதையினை தனியே அமர்ந்து எழுதி எடுத்துச் சென்று மேரியோ புஸோவிடம் காண்பித்தேன். இறுதியாக, நானும் புஸோவும் பேசி சில மாற்றங்களை திரைக்கதையில் கொண்டு வந்தோம்.

**காட்ஃபாதர் இரண்டாம் பாகம், முதல் பாகத்தை விட அதிக வசூலை குவித்ததா?**

இல்லை. நிச்சயமாக இல்லை. எனினும் காட்ஃபாதர் இரண்டாம் பாகம் (The Godfather II (1974) எனக்கு சிறந்த இயக்கு னருக்கான ஆஸ்கார் விருதினை பெற்று தந்தது. அதோடு, முதல் பாகத்தை விடவும் சிறந்த படமென்று பலராலும் பாராட்டப்பட்டது. அதோடு, பல வருடங்களுக்கு




பிறகு காட்ஃபாதர் மூன்றாவது பாகத்தையும் (The Godfather III (1990) இயக்கினேன். ஆனால், எல்லோரும் முதல் பாகத்தைதான் பெரிதும் விரும்புகிறார்கள். அதன் வசனங்களை இப்போதும் பயன் படுத்துகிறார்கள். அதற்கு காரணம், அப்படத்தில் எல்லாமும் சிறப்பாக அமைந்திருந்தது. மர்லன் பிராண்டோ எனக்கு கிடைத்திருந்தார். மிகச்சிறந்த தொழிற்நுட்பக் கலைஞர்கள் எனக்கு கிடைத்திருந்தார்கள். இரண்டாவது பாகத்தையே நான் இயக்க விரும்பவில்லை. இருந்தும், மூன்றாவது பாகத்தை செய்ததன் காரணம், அத்தருணத்தில் நான் மிகவும் சரிவடைந்திருந்தேன் என்பதால்தான்.

**காட்ஃபாதர் திரைப்படத்தை பற்றி இப்போது என்ன நினைக்கிறீர்கள்? அப்படம் தான் உங்களை புகழின் உச்சிக்கு உயர்த்தியது இல்லையா?**

உண்மையில் நான் காட்ஃபாதர் திரைப்படம் உருவாக்கப் பட்டதன் பின்னணியை மறக்கவே விரும்புகிறேன். அத்தனை தூரம் எனக்கு மன உளைச்சலை அளித்த திரைப்படம் என்றாலும் காட்ஃபாதர்தான் என்னை புகழின் உச்சிக்கு அழைத்துச் சென்றது என்பதையும் மறுக்கமுடியாது. காட் ஃபாதர்தான் என்னை உலகில் அடையாளப்படுத்தியது. அந்த படம்தான் எனக்கு தி கன்வர்சேஷனையும் (The Conversation (1972)), அப்போகாலிப்ஸ் நௌவ்வையும் (Apocalypse Now (1979)) இயக்கும் வாய்ப்பையும் எனக்களித்தது.

காட்ஃபாதர் திரைப்படம் என்னுடைய உழைப்பால் மட்டுமே சாத்தியமான படமல்ல. மர்லன் பிராண்டோ, அல் பாசினோ, மேரியோ புஸோ, எனது ஒளிப்பதிவாளர் வில்லிஸ், கலை இயக்குனர் கிளைமர் என்று பலருடைய உழைப்பும் அதில் கலந்திருக்கிறது. எல்லா படங்களுமே கூட்டு உழைப்பால் மட்டுமே சாத்தியமாகின்றன. வாழ்க்கையிலும் நாம் சக மனிதர்களின் உறுதுணையுடன்தானே ஒவ்வொரு நாளை கடத்திக் கொண்டிருக்கிறோம்.

**தமிழில்: ராம் முரளி**

●



# பிட்காயின்கள்
## ஒரு எளிய அறிமுகம்

சடோஷிநகமோட்டோ என்ற பெயருடைய ஒரு மனிதரை இந்த உலகம் கடந்த 2011 முதல் தேடி வருகிறது. இணையமெங்கும் தேடி அலைந்து ஆராய்ச்சிகள் செய்து இணையத்தில் அவரைப் போலவே எழுதுகிறார் இவராக இருக்குமோ இல்லை அவராக இருக்குமோ என்று ஊகிக்கிறார்கள். அப்படி சொல்லப்பட்டவர்களும் அது நான் இல்லை என்று மறுக்கிறார்கள். இவர் யாரென்று நமக்குத் தெரிந்தால் அந்த சிறிய விவரத்திற்கே கோடிக்கணக்கில் பணம் கிடைக்கலாம். அல்லது அது நீங்களாக இருந்தால் உலகின் பெரிய மென்பொருள் நிறுவனங்கள் உங்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள உங்கள் வீட்டு வாசலில் வரிசை கட்டி நிற்கும் நிலை வரும். அப்படி யார் இந்த சடோஷிநகமோட்டோ? பிட்காயின் என்று அழைக்கப்படும் விர்ச்சுவல்கரன்சியை உருவாக்கியவர்தான் அவர். கிரிப்டோகிராபி துறையைச் சேர்ந்தவர் (ரோஜா அரவிந்தசாமி சொல்வாரே அதேதான்) என்பதைத் தவிர வேறு எதுவும் அவரைப் பற்றித் தெரியாது. இன்று ஒரு பிட்காயினின் மதிப்பு இந்திய ரூபாயில் கிட்டத்தட்ட ரூ.80,000.

அதை உருவாக்கியவர் தன்னை யாரென்றே வெளிக்காட்டிக் கொள்ளவில்லை என்றாலும் அதன் ப்ரோகிராமிங் மற்றும் தொழில்நுட்பத்தை ஓபன்சோர்ஸ் எனப்படும் திறந்த நிலை மென்பொருளாக உலகத்திற்கு அளித்துச் சென்று விட்டதால் பிட்காயின் எந்தத் தடையுமின்றி வளர்ந்து வருகிறது. அதுதான் பிட்காயினின் சிறப்பும் கூட. அது ஒரு உண்மையான இணையப் பணம். எப்படி இணையம் என்று ஒன்றை யாரும் எந்த நாடும் சொந்தம் கொண்டாட முடியாத வகையில் அது பல கம்ப்யூட்டர்கள், சர்வர்களால் ஆன வலைப்பின்னலால் உருவானதோ அதேபோல பிட்காயினும் எந்த நாட்டின் ரிசர்வ் வங்கிக்கும் சொந்தமானதல்ல. உண்மையைச் சொல்லப் போனால் பிட்காயின் மூலம் பொருட்களை வாங்கவோ விற்கவோ எந்த வங்கியின் தயவும் தேவையில்லை. பிட்காயினை எந்த நாட்டின் அரசும் தடை செய்யவோ கட்டுப்படுத்தவோ முடியாது. உண்மையில் பிட்காயினின் நோக்கமே அதுதான். யாராலும் கட்டுப்படுத்த முடியாத ஒரு கரன்சி.

டோரண்ட்டுகளை பலரும் பயன்படுத்தியிருப்பீர்கள். அவற்றுக்கென்று பொதுவான சர்வர்கள் கிடையாது. ஒரு கணினியில் இருந்து இன்னொரு கணினிக்கு நேராக கோப்புகள் அனுப்பப்படும். இது போன்ற ஒரு அடிப்படையில் தான் பிட்காயின் இயங்குகிறது. ஆனால் டோரண்ட்டுகளைப் போல் அவ்வளவு எளிமையானது அல்ல. எந்த ஒரு பணப்பரிமாற்றமும் லெட்ஜர்களில் (பேரேடுகள்) பராமரிக்கப்படுவதை நீங்கள் பார்த்திருக்கலாம். இந்த லெட்ஜர்களை வங்கிகளோ அலுவலகங் களோ வைத்திருக்கும். பிட்காயினைப் பொறுத்தவரை ஒட்டுமொத்தமாக ஒரே லெட்ஜர்தான். உலகம் முழுக்க இதுவரை நடந்த அத்தனை பிட்காயின் பரிமாற்றங்களும் அந்த லெட்ஜரில் தான் பதியப்பட்டிருக்கும். இனிமேல் நடக்கப்போகும் பரிமாற்றங்களும். இதை பிளாக்செயின் என்று அழைக்கிறார்கள். இந்த லெட்ஜர் பிட்காயின் வலைப்பின்னலில் இணைந்திருக்கும் அத்தனை கணினிகளிலும் ஒரேநேரத்தில் சேமிக்கப்பட்டுள்ளது.

ஒரு புதிய பரிமாற்றம் நிகழும்போது அந்தப் பரிமாற்றத்தின் விவரங்களை விற்பவரோ வாங்குபவரோ உள்ளிடுகிறார். அந்தப் பரிமாற்றத்தின் விவரங்கள் பிட்காயின் நெட்வொர்க்கை அடைந்ததும் தான் சுவாரசியம் தொடங்குகிறது. பிட்காயின் மைனர்ஸ் என்று அழைக்கப்படும் நிறுவனங்களோ அல்லது தனிப்பட்ட மனிதர்களோ அந்தப் பரிமாற்றத்தை சரிபார்த்து பிளாக்செயினில் இணைக்கும் ஒரு சிக்கலான வேலையைச் செய்கிறார்கள். கையில் மல்லிகைப் பூ சுற்றிய மைனர் அல்ல.




சுரங்கம் தோண்டும் மைனர் (miner). இந்த வேலையை யார் செய்வார்கள் என்று சொல்ல முடியாது. லட்சக்கணக்கான கணினிகளில் எங்கு வேண்டுமானாலும் இது நடக்கலாம். அப்படி நடந்தால் அந்த சுரங்க உரிமையாளர் கொஞ்சம் பிட்காயினை சம்பாதிப்பார். உலகெங்கும் இந்த வேலையை பல லட்சம் பேர் செய்து வருகிறார்கள். பரிமாற்றம் பிளாக் செயினில் இணைந்தபின் இன்னொரு மைனர் சரிபார்ப்பார். அதன் பிறகே லெட்ஜர் உலகெங்கும் உள்ள பிட்காயின் கணினிகளில் மாற்றம் பெறும். அதற்கு அடுத்த பரிவர்த்தனை புதிய லெட்ஜரின் வால் பகுதியில் இணைக்கப்படும். இப்படியாக அந்த லெட்ஜர் ஒரு பெரிய சங்கிலித் தொடராகவே எப்போதும் இருக்கும்.

உருவாக்கியவர் யாரென்று தெரியாது. எந்தப் பொதுவான சர்வரிலும் அதன் பதிவுகள் வைக்கப்படவில்லை. எந்த அரசு கஜானாவும் வங்கியும் இதற்கு உத்தரவாதம் தருவதில்லை. இப்படி வெளிப்பார்வைக்கு பாதுகாப்பே இல்லாதது போல் தோன்றும் பிட்காயின்கள் உண்மையில் மிக மிகப் பாதுகாப்பானவை என்கிறார்கள் தொழில்நுட்ப வல்லுனர்கள். முதலில் இதை யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. கட்டுப்படுத்தவும்முடியாது. ஒரு இடத்தில் கணினியை ஹேக் செய்து லெட்ஜரில் மாறுதல் செய்தாலும் மீதமுள்ள கணினிகள் அதை ஒத்துக் கொள்ளாது. தாக்கப்பட்டகணினி பிட்காயின் நெட்வொர்க்கிலிருந்து விடுவிக்கப்படும். இதுதவிர இடையில் வங்கிகள் எதுவும் இல்லாத காரணத்தால் பிட்காயின்கள் மூலம் பரிவர்த்தனை செய்யும்போது சேவைக்காக எந்தப் பணமும் பிடித்தம் செய்யப்படுவதில்லை அல்லது மிகமிகக் குறைந்த பணமே பிடித்தம் செய்யப்படுகிறது. அதுவும்

பிட்காயின்களில்தான். நல்ல சக்தி வாய்ந்த கணினி வாங்கும் அளவு பணமும் ஓரளவு தொழில்நுட்ப அறிவும் இருந்தால் நீங்களேகூட ஒரு பிட்காயின் மைனராக ஆகலாம். தங்கள் விருப்பத்துக்கு ஆளாளுக்கு பிட்காயின்களை உருவாக்கிக் கொள்வார்களோ என்ற கவலை வேண்டாம். 21 மில்லியன் என்ற எண்ணிக்கையைத் தாண்டி பிட்காயின்களை யாராலும் உருவாக்க முடியாது. அதுவும் 2140 ம் ஆண்டில்தான் அந்த அளவைத் தொட முடியும். அதைத் தாண்டி பிட்காயின்கள் உருவாக அதன் மென்பொருள் அனுமதிக்காது. ஒவ்வொரு பிட்காயினும் எங்கே இருந்து எங்கே செல்கிறது. யாரிடம் இருக்கிறது என்ற விவரம் எப்போதும் அனைவரும் பார்க்கும் வகையில் பொது லெட்ஜரில் குறித்து வைக்கப்பட்டிருக்கும் என்பதால் பிட்காயின் கறுப்புப் பணத்தை ஒழிப்பதில் பெரிய பங்கு வகிக்கும் என்று கூறுகிறார்கள். அது தவிர பிட்காயின் ஒரு முழுமையான டிஜிட்டல் கரன்சி என்பதால் மேலும் சில நல்ல பயன்கள் உண்டு. உதாரணத்துக்கு அரசாங்கம் ஒரு மருத்துவத் திட்டத்துக்கு நிதி ஒதுக்குவதாக வைத்துக் கொள்வோம். அந்தப் பணத்தை மருத்துவமனைகளில் மட்டுமே பயன்படுத்தும்படி வடிவமைத்தால் முறைகேடுகளைத் தடுக்கலாம் அல்லவா? பிட்காயின்களை அப்படி முறைப்படுத்த முடியும். ஒரு ஐந்து நட்சத்திர விடுதியின் அறை வாடகை கட்ட அந்த பிட்காயின் களைப் பயன்படுத்த முடியாது.

ஆரம்பத்தில் ஏதோ சில கணிப்பொறியாளர்களின் விளையாட்டு போல ஆரம்பித்த இந்த பிட்காயின் கடந்த ஏழு ஆண்டுகளில் உலகப் பொருளாதாரத்தில் அசைக்க முடியாத ஒரு கரன்சியாக இடம் பிடித்து விட்டது. பிட்காயின் போலவே லைட்காயின், ரிப்பிள், ஓபன்காயின் என்று பல விர்ச்சுவல் கரன்சிகள் உருவாகிவிட்டன. இது ஏதோ வெளிநாட்டில் நடக்கும் விவகாரம் என்று நீங்கள் நினைக்க வேண்டியதில்லை. செப்பே (Zebpay) எனப்படும் இந்திய பிட்காயின் வாலட் நிறுவனம் ஆரம்பித்த முதல் பத்து மாதங்களில் 100 கோடி வியாபாரத்தை நடத்தியுள்ளது. இது சென்ற ஆண்டு நிலவரம். பணநீக்க நடவடிக்கைக்கு அப்புறம் என்ன நடக்கிறது என்று புள்ளிவிவரம் இல்லை. இந்தியாவின் ரிசர்வ் வங்கி பிட்காயின் உட்பட எந்த விர்ச்சுவல் கரன்சியையும் அங்கீகரிக்கப் போவ தில்லை என்று சொல்லியிருந்தாலும் இதுவரை 33 நாடுகள் பிட்காயினை வெவ்வேறு அளவுகளில் அங்கீகரித்துள்ளன. இது மேலும் அதிகரிக்கும் என்கிறார்கள் பிட்காயினைப் பயன்படுத்துபவர்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

**– ஷான்**

●


# நாத்திகள் • கவி இளவல் தம்பி

எஸ்.ஸ்ரீதேவி என்றுதான்
எழுதுவாள் பெயரை
அவளை அவளே
பெற்றெடுத்ததாய்
அடிக்கடி சொல்லிக்கொள்வாள்
அப்படியென்றால்
நீ கடவுளா என்பேன்
இல்லை நான் நாத்திக'ள்'
என்பாள்
பெரியாரும் பேசாத
பெண்பால் அது
சுயம்பு ஆதலால்
சொல்லி ஜெபிக்க ஆளாருமற்ற
மதங்கள் சொல்லும் எந்தக்
கடவுளும்
நாத்திகனே என்றேன்
'டிஃபைன் கடவுள்' என்றாள்
'டிவினிட்டி இஸ் கடவுள்'
என்றேன்
வீட்டு நாய்களைப்
பிடிக்காது அவளுக்கு
உடன்பாடில்லை
கட்டுக்குள் இருக்கும்
எதன்மீதும்
வீடென்ற கட்டமைப்புமே
அதற்குள் அடங்கும்தான்
அழுதலும் பிடிக்காது
அழுதாலும் பிடிக்காது
கண்ணீர் விடாதே
கலகம் செய் என்பாள்
நடந்ததைக் கேட்டால்,
'செத்த பிள்ளைக்கு
பெயரிடாதே..'
வருவதைக் கேட்டால்,
'வந்தால் பார்க்கலாம்,
வரட்டும் பார்க்கலாம்..'
என்று முடிப்பாள்.
ஓரிடத்தில் தங்குவதில்லை
ஒருவருக்காகவும்
தயங்குவதில்லை
தனக்கென்று எதையும்
சேர்ப்பதுமில்லை
பிறரிடம் எதையும்
கேட்பதும் இல்லை
இந்த நாளில்,
இந்த நொடியில்
மட்டுமே கவனம் மற்றவை
மாயை
அடிமைக்கு அநாதையே மேல்
அவளுக்கிதுவே அடிப்படைக்
கொள்கை
பிழைக்கத் திரியும்
லட்சோபலட்சப்
பிணங்களில் மத்தியில் அவள்
மட்டுமே
வாழ்ந்துகொண்டிருக்கிறாள்!

---

சஞ்சிகை

குறித்த
தங்களின்
விமர்சனங்களை,
கருத்துகளை
அனுப்ப:



**கோ.முருகராஜ், 'சஞ்சிகை',**

*12/6-2, எஸ்.வி.பி. நகர் இரண்டாவது தெரு, முதல் தளம், எஸ். ஆலங்குளம்,*
*மதுரை625017* | sanjigai@gmail.com

அறியப்படாத தமிழகம்

# தமிழகம் அறிய வேண்டிய புத்தகம்

சித்திரவீதிக்காரன்




நம் வீட்டு நூலகத்தில் கட்டாயம் இருக்க வேண்டிய புத்தகம், நாம் தினசரி வாசிக்க வேண்டிய புத்தகம், நாம் சந்திக்கும் நபர்களுக்கு பரிசளிக்கக் கூடிய புத்தகம் எனப் பல வகைகளிலும் முக்கிய மானதாக ஒரு நூலைச் சொல்ல முடிந்தால் அது தொ. பரமசிவன் எழுதிய "அறியப்படாத தமிழகம்" தான். தொ.ப அய்யாவிடம் பெரியார் குறித்தும் பேசலாம் - பெரியாழ்வார் குறித்தும் பேசலாம், சங்க இலக்கியம் குறித்தும் பேசலாம் - சங்கர மடம் குறித்தும் பேசலாம் என்பதுதான் அவரது தனிச் சிறப்பு. தொ.ப.வின் நூல்களைத் தேடித் தேடி வாங்கி வாசிப்பதும், அதை பலரிடம் கொண்டு சேர்ப்பதும் நமது கடமை.

*நம்முடைய அடிப்படைத் தேவைகள் குடிநீர், உணவு, உடை, இருப்பிடம் ஆகும். இவைகளை நாம் பயன்படுத்துகிறோமே தவிர அவற்றைப் பற்றிய தெளிவு நம்மிடம் இல்லை. அவைகளைக் குறித்த தெளிவை இந்நூல் உங்களுக்கு ஏற்படுத்தும். உதாரணமாக தண்ணீர் என்பது பொதுவான சொல்லாக இருந்தாலும் அது பயன்படும் இடத்தைப் பொறுத்து பெயர் மாறுபடுவதை ஒரு பத்தியில் அழகாகச் சொல்கிறார்.*

*"நீர் என்பது வானத்திலிருந்து வருவது என்பதனால் அதனை 'அமிழ்தம்' என்றே வள்ளுவர் குறிப்பிடுவார். நீர் நிலைகளுக்குத் தமிழர்கள் வழங்கி வந்த பெயர்கள் பல. சுனை, கயம், பொய்கை, ஊற்று என்பன தானே நீர் கசிந்த நிலப்பகுதிகளாகும். குட்டை என்பது மழை நீரின் சிறிய தேக்கமாகும். குளி(ர்)ப்பதற்குப் பயன்படும் நீர்நிலை 'குளம்' என்பதாகவும், உண்பதற்கு பயன்படும் நீர்நிலை 'ஊருணி' எனவும், ஏர்த்தொழிலுக்கு பயன்படும் நீர்நிலை 'ஏரி' என்றும் வேறு வகையாலன்றி மழை நீரை மட்டும் ஏந்தி நிற்கும் நிலையினை 'ஏந்தல்' என்றும், கண்ணாறுகளை உடையது 'கண்மாய்' என்றும் தமிழர்கள் பெயரிட்டு அழைத்தனர்"*

‘இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்’ என தமிழ் குறித்த முதல் கட்டுரையிலேயே நம்மை அசத்தி விடுகிறார். அதைத் தொடர்ந்து இந்நூலில் தமிழர் உணவு, உணர்வும் உப்பும், உணவும் நம்பிக்கையும், எண்ணெய், சோறுவிற்றல், பிச்சை, தெங்கும் தேங்காயும், உரலும் உலக்கையும், சிறுதெய்வங்களின் உணவு, வீடும் வாழ்வும், தமிழர் உடை, உறவுப்பெயர்கள், தாலியும் மஞ்சளும், சங்கும் சாமியும், தைப்பூசம், தீபாவளி, துலுக்கநாச்சியார், பழையகுருமார்கள், மதமும் சாதியும், பல்லாங்குழி, தவிடும் தத்தும், தமிழக பௌத்தம், சமணம், அஞ்சுவண்ணம், பேச்சு வழக்கும் இலக்கண வழக்கும் என இதுபோன்ற பல தலைப்புகளில் உள்ள கட்டுரைகள் நாம் அறியாத பல தகவல்களைக் கொண்டுள்ளது.

“உரையாடும் போது அவரிடமிருந்து தெறிக்கும் கருத்துக் களும் சான்று மேற்கோள்களும் வாழ்ந்து பெற்ற பட்டறிவும் உடனுரையாடுபவரை மலைப்பில் ஆழ்த்துபவை” என நூல் முன்னுரையில் ஆ.இரா.வேங்கடாசலபதி கூறுகிறார். அதை நானும் ஒருமுறை அனுபவிக்க நேர்ந்தது. தொ.ப.வின் வீட்டில் இன்றைய கல்வி முறை குறித்து பேசிக் கொண்டிருந்த போது “இப்ப எங்க Teaching இருக்கு. எல்லாமே Coachingதான்” என்றார். தன் கருத்தை எளிமையாய், வலிமையாய் சொல்லும் ஆற்றல் தொ.ப.விடம் உண்டு.

நிறைய விசயங்களைப் பார்த்திருப்போம் அல்லது கவனிக் காதபடி கடந்திருப்போம். தொ.ப. அது போன்ற விசயங்களை எடுத்துரைக்கும் போது நாம் அசந்து போகிறோம். கொஞ்சம் குண்டான பெண்களை குந்தாணி என கேலி பேசுவார்கள். அந்த சொல் எங்கிருந்து வந்ததென பார்த்தால் உரல் மேல் உலக்கை கொண்டு குத்தும் போது தானியங்கள் சிதறாமல் இருக்க வைக்கும் வட்டப் பலகைகைக் குறிக்கிறது. தலையும், காலும் இல்லாமல் இருக்கும் அந்தப் பலகைதான் குந்தாணி. அதுபோல தலையும் காலும் தெரியாதளவு குண்டான பெண்களைத்தான் குந்தாணி எனச் சொல்கிறார்கள் என “உரலும் உலக்கையும்” கட்டுரையில் சொல்கிறார்.

அதேபோல உறவுப்பெயர்கள் குறித்து எழுதும் போது தம் பின் பிறந்தவன் என்ற சொல்லிலிருந்து தம்பி என்ற சொல் வந்ததாக குறிப்பிடுகிறார். இந்த புத்தகம் வாசிக்கையில் எனக்கு தோன்றிய ஒரு சொல் அத்தாச்சி. அண்ணன் மனைவியை மதினி என்று அழைப்பதைப்போல மதுரைப் பகுதிகளில் அத்தாச்சி என்று சொல்வார்கள். கணவன் மனைவிக்கு தாலி

கட்டுகையில் உடன் சாட்சியாய் நின்றவள் என்பதால் அத்தாச்சி என அழைக்கிறார்கள் என எனக்குத் தோன்றியது. இப்படி இந்நூல் நம்மை பண்பாட்டுத் தளத்தை நோக்கி கொண்டு சேர்க்கிறது. பல்லாங்குழி குறித்த கட்டுரை அந்த விளையாட்டின் பின்னுள்ள பல விசயங்களை தெளிவுப்படுத்தியது. நாலு காய்கள் ஒரு குழியில் சேரும்போது அதை பசு என எடுத்துக் கொள்வது குறித்து சொல்லும்போது நம் முன்னோர்கள் முன்பு கால்நடைகளையே பண்டமாற்றாக முதலில் கொடுத்திருந்ததை எடுத்துக் காட்டுகிறார். "பேச்சு வழக்கினைத் தன் அடிப்படையாக ஆக்கிக் கொண்ட காரணத்தால்தான் தமிழிலக்கணம் இன்றுவரை கட்டுடைபடாமல் தன்னைக் காத்து உயிர்ப்பாற்றல் மிக்கதாக விளங்குகிறது' என்ற தொ.ப.வின் கருத்தை நாம் உள்வாங்கி நம் மொழி இலக்கணத்தை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சேர்க்க வேண்டும்.

பீட்டர் பாண்டியன் குறித்த கட்டுரை அந்த ஆங்கிலேயர் மீதான மரியாதையை ஏற்படுத்துகிறது. சமணம் குறித்த கட்டுரை மலைகளையும், தொல்தலங்களையும் நோக்கி பயணிக்க வைத்தது. தைப்பொங்கல் போல தீபாவளி தமிழர் பண்டிகையே அல்ல என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். கறுப்பு என்ற வண்ணத்தின் மீதுள்ள இன்றைய வெறுப்பை "கறுப்பு" கட்டுரை அடித்து வெளுக்கிறது. கருப்பின் கண் மிக்குள்ளது அழகு.

பண்பாட்டு அசைவுகள் நூல் 'அறியப்படாத தமிழகம்' மற்றும் 'தெய்வங்களும் சமூக மரபுகளும்' என்ற தொ.ப.வின் இரண்டு கட்டுரைத் தொகுப்புகளை உள்ளடக்கிய நூலாகவும் வந்துள்ளது. அறியப்படாத தமிழகம் தனிநூலாகவும் காலச் சுவடு வெளியிட்டு உள்ளது. இதில் அறியப்படாத தமிழகம் நூறுபக்கங்கள் இருக்கும். இதில் கிட்டத்தட்ட 50 தலைப்புகளில் இரண்டு — மூன்று பக்க அளவு கொண்ட ஒரு கட்டுரை உள்ளது. அந்த சிறிய கட்டுரைக்கு பின்னால் தொ.பரமசிவன் அய்யாவின் உழைப்பும், கள ஆய்வும் நிறைந்திருப்பதை நாம் வாசிக்கையிலேயே உணர முடியும். பண்பாட்டு அசைவுகள் கட்டுரையில் அவர் குறிப்பிடும் விசயம் நம்மை அசைத்து விடுகிறது. இப்படி ஒவ்வொன்றாய் எல்லாவற்றையும் சொல்லி விட்டால் வாசிக்கும் ஆர்வத்தை வழியிலேயே தடுத்தது போலாகிவிடும். உங்க டூத்பேஸ்ட்ல உப்பு இருக்கா? என விளம்பரங்கள் கேட்பது போல நான் உங்களிடம் கேட்கிறேன் உங்ககிட்ட அறியப்படாத தமிழகம் இருக்கா?

●



# சுற்றுசூழல் பற்றிய சோவியத் சிந்தனைகள்

அருண் நெடுஞ்செழியன்

*இயற்கைக்கும் மனித சமூகத்திற்கும் இடையிலான முரண்பாடு அண்மைக்காலமாக மிகத் தீவிரமாக புறவடிவில் வெளிப்பட்டு வருகின்றன. உலகமயம் தாராளமயம் தனியார்மயக் கட்டத்தில் இம்முரண்பாடு மிக வேகமாக அதிகரித்து வருகின்றன. காடழிப்பு, உயிரினங்களின் வீழ்ச்சி, காலநிலை மாற்றம், தண்ணீர் சிக்கல், காற்று மாசு, ஆலைக் கழிவுகள், வேளாண்மை சிக்கல், அணு உலை ஆபத்து என நமது புற உலகம் மிகப்பெரும் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன.*

*இச்சூழலில்தான் அண்மைக்காலமாக சூழலியல் அரசியல் மீதான விவாதம் பரவலாகியுள்ளது. நாமும் நமது பூமியும் தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறோம் என்ற உணர்வு தீவிரம் பெறத் தொடங்கியுள்ளது. இந்த சிக்கலுக்கான பல காரணங்களும் அதற்கான தீர்வுகளும் பேசப்படுகின்றன. மக்கள் தொகை பெருக்கம் ஒரு காரணம் என்றும், தனி நபர் சுய ஒழுக்கமின்மை மற்றொரு காரணம் என்றும் பேசப்படுகின்றன. மேலும் முறையான சட்ட விதிகள் கடைபிடிக்கப்படாமைதான் சிக்கலுக்கு மையக் காரணம் என்றும் மற்றொரு சாரர் வாதம் செய்கின்றனர். இவ்வகையான கருத்தியல்களே பொதுவாக சூழலியல் அரசியல் விவாதங்களில் செல்வாக்கு செலுத்துகிற கருத்தியலாக உள்ளது. இந்த விவாதங்களை நாம் வரலாற்று பொருள்முதல்வாத கண்ணோட்டத்தின் அடிப்படையில் விமர்சனம் செய்வதன் வழியேதான் சூழலியல் குறித்த மார்க்சிய கண்ணோட்டத்தை வளர்த்தெடுக்கவும் நிலை நிறுத்தவும் முயற்சிக்கிறோம். இயற்கைக்கும் மனிதனுக்குமான*

முரண்பாட்டை வரலாற்று வளர்ச்சிப் போக்கில் வைத்து பேசுவது, குறிப்பாக வர்க்க கண்ணோட்டத்தில் பகுப்பாய்வதே இதன் அர்த்தமாகும்.

ஆனால் சூழலியல் அரசியல் குறித்த மார்க்சிய கண்ணோட்டத்தை இந்திய நிலப்பரப்பில் விவாதிப்பது அவ்வளவு எளிதான விஷயமாக இருக்கவில்லை. ஏனெனில் கடந்த காலங்களில் சோவியத் ரஷ்யாவில் ஏற்பட்ட மோசமான சூழலியல் சீர்கேடுகள், குறிப்பாக ஆரல் கடலை வற்றச் செய்தது, பைக்கால் ஏரி சீர்கேடு. செர்நோபில் அணு உலை விபத்து போன்ற சூழலியல் படுகொலை நிகழ்வுகளானது மார்க்சிய சூழலியலை வளர்த்தெடுப்பதற்கு முட்டுக் கட்டைகளாகின. மேலும், இந்திய பாராளுமன்ற கம்யூனிஸ்ட்களின் இயந்திரத்தன தொழில்மய கொள்கையும் முட்டுக் கட்டைக்கு மற்றொரு காரணமாகின. தீவிர தொழில்மயமாக்கலால்தான் பாட்டாளி வர்க்கம் வளரும் என்ற கண்ணோட்டமானது சூழலியல் கரிசனத்தை பின்னுக்குத் தள்ளின. இந்திய பாராளுமன்ற கம்யூனிஸ்ட்களின் “புரோமோதியஸ்” நிலைப்பாடு மார்க்சிய சூழலியல் விவாதத்திற்கு பின்னடவை ஏற்படுத்தின. கூடங்களும் அணு உலை திட்டம் தொடர்பான இந்திய பாராளுமன்ற கம்யூனிஸ்ட்களின் தொடக்ககால நிலைப்பாடு நாமறிந்தவைதான். இவை ஒருபுறம் இருக்க, மார்க்சிய மூலவர்களான மார்க்சும் எங்கெல்சுமே மனித மைய பார்வை கொண்டவர்கள்தான்; இயற்கையை மனிதன் ஆளுகை செய்து கட்டுப்படுத்த வேண்டும் என்ற விரும்பியவர்கள்தான்; இயற்கையை மனிதனுக்கு அடிபணிய வைக்கவேண்டும் என்றவர்கள்தான் என்ற தவறான வாதமும் கட்டமைக்கப்பட்டன,

இவ்வாறாக,மேற்கூறிய காரணங்களானது, சூழலியல் குறித்த மார்க்ஸிய கண்ணோட்ட விவாதங்களுக்கு பின்னடைவாக அமைந்தன. அரசியல் நீக்கம் பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் முதலாளித்துவ சீர்த்திருத்தல்வாதிகளின் கருத்துக்கள் செல்வாக்குப் பெற்றன. எனவே, புரட்சிக்கு பிந்தைய சோவியத் ரஷ்யாவில் நடந்தது என்ன? மார்க்ஸ் எங்கெல்சுசின் சூழலியல் கரிசனங்கள் யாவை? என்பது குறித்து விவாதிப்பது அவசமாகியது.

**1**

**சோவியத் ரஷ்யாவின் சூழலியல்:**

சோவியத் ரஷ்யாவின் சூழலியல் வரலாற்றை நாம் மூன்று காலகட்டங்களாக பிரிக்கலாம்.

**1917-30 வரையிலான காலகட்டம்:**

*சரியாக நூறாண்டுகளுக்கு முன்பாக சோவியத் ரஷ்யாவில் போல்ஷ்விக் கட்சியின் தலைமையில் நடைபெற்ற சோசலிசப் புரட்சியானது, உலகின் முதல் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை நிறுவியது. போல்ஷ்விக் தலைமையிலான ஆட்சி தலைமைக்கு வந்தாலும் மூன்றாண்டு காலம் கடுமையான சிவில் யுத்தத்தை எதிர்கொண்டது. சுற்றிலும் ஏகாதிபத்திய முகாம்களின் சுற்றிவளைப்புகள், உள்நாட்டு எதிர்புரட்சியாளர்கள் என இளம் பாட்டாளி வர்க்க அரசு அச்சுறுத்தல்களை எதிர்கொண்டது. இந்த சூழ்நிலையில்தான் இயற்கை பாதுக்காப்பிற்கு பெரும் முன்னெடுப்புகளை லெனின் தலைமையிலான அரசு மேற்கொண்டது.*

*லுனகார்ச்கி தலைமையிலான கல்விக்கான மக்கள் கமிசார், இயற்கை பாதுகாப்பு குழுவை நிறுவியது. செபோவேட்னிக் எனும் இயற்கை பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இயற்கை வளம் மிக்க பகுதிகளை அப்படியே விட்டு விடுவது, அப்பகுதியில் வேட்டையாடுவது தடை செய்யப்பட்டது. இயற்கை அறிவியல் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வது என்ற நோக்கில் செபோவேட்னிக் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. 1933 ஆம் ஆண்டில் சுமார் 33—செபோவிட்னிக் அமைக்கப்பட்டன. இதன் பரப்பளவு சுமார் 2.7 மில்லியன் ஹெக்டேர் ஆகும். ஸ்டான்ஷிகி என்பார்தான் செபோவிட்னிக் திட்டத்தை பெரிதும் ஆதரித்தார். இவர்தான் சோவியத் சோவியத் ரஷ்யாவின் முதல் சூழலியல் இதழின் ஆசிரியரும்கூட.*

*இந்த காலக்கட்டத்தில் சோவியத் சூழலியல் அறிஞர்களின் அற்புதமான ஆய்வுகள் வெளிவந்தன. 1926 இல் உயிர்ச்சூழல்* (Biosphere) *எனும் நூலை சுகசெவ் மற்றும் வெர்னாட்ஸ்கி வெளியிட்டனர். உயிரினங்களின் தோற்றம் குறித்த சிறந்த ஆய்வு நூல் இது. பாரம்பரிய விதைகளின் தோற்றம் மற்றும் பரவல், பரிணாமம் குறித்த ஆய்வை வாவிலோவ் மேற்கொண்டார். அதேபோல புகாரின், உர்னவோச்கி போன்றோர்களும் இயற்கைக்கும் மனிதனுக்குமான உறவு குறித்த ஆய்வையும் இயற்கை அறிவியலையும் வளர்த்தெடுத்தனர்.*

**1930-50 காலகட்டம் :**

*இந்த கட்டத்தில் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் ரஷ்ய அரசானது தீவிர தொழில்மயத்தை ஊக்கு வித்தது. தொழில்நுட்பம், அதிவேக வளர்ச்சி என்பதே தாரக மந்திரமாகியது. இரண்டாம் உலகப் போரானது தொழில் மயத்தை மேலும் தீவிரமாக்கியது. கனரக தொழில்மய ஊக்குவிப்பு நடவடிக்கைகள், கிராமப்புற*

விவசாயத்தை பலி கொண்டது. செபோவிட்னிக் திட்டங்கள் படிப் படியாக குறைக்கப்பட்டன. புகாரின்,வாவிலோவ் போன்றவர்கள் ஸ்டாலினுடன் முரண்பட்டனர். ஒரு கட்டத்தில் இவர்கள் மர்மமான முறையில் கொல்லப்பட்டனர். இவர்களின் மரணம் மற்றும் தீவிர கனரக தொழில்மய ஊக்குவிப்புகள் சூழலியல் கரிசனத்தை பின்னுக்கு தள்ளின.

**1950-90 காலகட்டம்:**

ஸ்டாலின் மரணத்திற்கு பிறகு நிலைமை மோசமாகியது. ஸ்டாலின் இறந்த ஆறாவது நாளில் வனத்துறை அமைச்சகம் கலைக்கப்பட்டது. சூழலியல் பாதுகாப்பு நடைமுறை விதிகள் தளர்த்தப்பட்டன. கெடுபிடி காலகட்டம், கண்மூடித்தன வளர்ச்சியை துரிதப்படுத்தியது. மலேன்கோவ் மற்றும் குருஷேவ் காலகட்டத்தில் நிலைமை மோசமாகியது. ஆரல் கடலின் வரத்து கால்வாய்களும், நீரோடைகளும் தெற்கு யுரேசியவிற்கு திருப்பியதால் பெரும் கெடு நேர்ந்தது. 1986 ஆண்டில் ஏற்பட்ட செர்னோபில் அணு உலைவிபத்தானது பெரும் சூழல் கேடுகளை உருவாக்கியது. இவ்வாறான பெரும் சூழலியல் சீர்குலைவுகளுக்கு எதிராக சூழலியல் போராட்டங்கள் ரஷ்யாவில் தீவிரம் பெறத் தொடங்கின. பல சூழலியல் அமைப்புகள் போராட்டங்களை முன்னெடுத்தன. சூழலியல் கரிசனம் மீதான விவாதங்கள் முன்னுக்கு வந்தன.

## 2

## சோவியத் பொருளாதாரம் குறித்த மாவோவின் விமர்சனம்:

இவ்வாறாக சோவியத் சூழலியல் வரலாறானது ஆக்கப் பூர்வமுடன் தொடங்கி பின்பு சீர்குலைவுகளுக்கு உள்ளானது. ஆக்கப்பூர்வ முன்னெடுப்புகளும் போதுமான வைகளாக இல்லை என்பதையும் நாம் இங்கு விமர்சனத்துடன் அணுக வேண்டியவர் களாக உள்ளோம்.

சோவியத் ரஷ்யாவின் சோசலிச கட்டுமானத்தில் ஏற்பட்ட தவறுகளை, சோவியத் அரசு மற்றும் சோவியத் பொருளாதார கொள்கையை விமர்சனப்பூர்வமுடன் பகுப்பாய்வு செய்வது அவசியமாகிறது. ஒரு முதாளித்துவ அறிவி ஜீவியின் பார்வை யிலோ அல்லது ஒரு திருத்தல்வாதியின் பார்வையிலோ அல்லாமல், சோசலிசக் கட்டுமானத்தில் ஏற்பட்ட தவறுகளை மார்க்கிய அடிப்படையில் நாம் மறு ஆய்வு செய்யவேண்டியது அவசியமாகிறது. மாவோவின் சோவியத் பொருளாதாரம் மீதான விமர்சனம் அதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். 1950 களில் பத்து பெரும் உறவுகள் மற்றும் சோவியத் பொருளாதாரம்



மீதான விமர்சனக் குறிப்புகள் என்ற கட்டுரைகளில் சோவியத் ரஷ்யாவின் சோஷலிசக் கட்டுமானத்தில் ஏற்பட்ட தவறுகளை மாவோ சுட்டிக் காட்டுகிறார்.

இத்தவறுகளை நாம் ஆழ்ந்த அக்கறையுடன் பயில்வது அவசியமாகும். சோவியத் பொருளாதாரக் கொள்கையானது, கனரகத் தொழில்துறைக்கும் விவசாயம் மற்றும் சிறு குறு தொழில்துறைக்குமான உறவை சரியாக கையாளவில்லை என்பது மாவோ முன்வைத்த முக்கியமான விமர்சனமாகும். சோவியத் பொருளாதாரமானது, உற்பத்தி சக்திகளுக்கு முன்னுரிமை வழங்கியதே அன்றி, உற்பத்தி உறவுகளுக்கு முக்கிய இடம் வழங்கவில்லை என்பது மாவோவின் விமர்சனமாகும். இதையே சோவியத் அரசு ஒற்றைக் காலில் நடக்கிறது என்றார் மாவோ. சீன நடைமுறையில் இந்த தவறுகளை களைந்து கிராமத்திற்கும் நகரத்திற்குமான இடைவெளியை குறைப்பதற்கு மாவோ முயன்றார். மாவோவின் காலத்திற்கு பின்பாக நிலைமை மோசமாகிய கதை நாமறிந்தவைதான். இன்றோ சோசலிச நாடுகள் என சொல்லிக்கொள்கிற நாடுகளில்தான் சூழலியல் சிக்கல்கள் அதிகமாக உள்ளது என்ற சூழலியல் அறிஞர் இயான் ஆங்கசின் சொல்தான் நினைவுக்கு வருகிறது!

**3**

**மார்க்ஸ் எங்கெல்சின் சூழலியல் பங்களிப்பு:**

மார்க்ஸ் எங்கெல்ஸ் வாழ்ந்த காலகட்டங்களில் சூழலியல் சிக்கல்கள் பிரதான சிக்கல்களாக முன்னுக்கு வரவில்லை. அவர்கள் காலத்தில், முதலாளியத்தின் வளர்ச்சியும், இந்த

வளர்ச்சிப் போக்கில் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க போராட்ட உணர்வுகள் கருக்கொண்டு வருவதை ஆழ்ந்த அக்கறையுடன் பகுப்பாய்வு செய்துவந்தனர். பாட்டாளி வர்க்க போராட்டத்தின் வெற்றியில், ஒட்டுமொத்த சமூக விடுதலையை கண்டனர். இதற்கு தடையாக உள்ள பிற்போக்கு கருத்தியலை கடுமையாக விமர்சனம் செய்தனர். இந்த விமர்சனகளின் வழியே மனிதனுக்கும் இயற்கைக்குமான ஊடாட்டம் குறித்த மார்க்ஸ் எங்கெல்சின் கண்ணோட்டத்தை நாம் புரிந்துகொள்ள இயலும்.

**இயற்கை ஆராதிக்கிற "உண்மையான சோசலிஸ்டுகள்" மீதான மார்க்ஸ் எங்கெல்சின் விமர்சனம்:**

உண்மையான சோசலிஸ்ட்கள் என்ற பெயரில் ஜெர்மனியில் அறிவுஜீவி எழுத்தாளர்கள் குழு ஒன்று இயங்கிவந்தது. இயற்கையை வழிபாட்டு பொருளாக ஆராதிப்பது, சுத்தமான இயற்கையுடன் மனிதர்கள் இணைக்கப்பட வேண்டும் என்பது போன்றவை இவர்களின் கொள்கைகளாக இருந்தன. இயற்கையை வரலாறு சாராத வெறும் அருவமாக பார்க்கிற இயற்கை வழிபாட்டுப் போக்கை மார்க்ஸ் கடுமையாக விமர்சனம் செய்கிறார். இயற்கையின் ஓரங்கமாக மனிதன் உள்ளான். இயற்கையின் விளைபொருளாக மனிதன உள்ளான். அதே நேரத்தில் மனிதன் ஒரு சமூக உயிரியாகவும் உள்ளான். தனது உற்பத்தி நடவடிக்கைகள் மூலமாக அவனது சொந்த சமூகத்தை அவனது உழைப்பின் மூலமாக படைத்துக்கொள்கிறான். எனவே மனிதன் இயற்கை உயிரியாகவும் சமூக உயிரியாகவும் உள்ளான் என மார்க்ஸ் எழுதுகிறார்.

இயற்கைக்கும் மனிதனுக்குமான பொருள் பரிமாற்ற உறவின் (உழைப்பின் அடிப்படையிலான) அடிப்படையில், இயற்கையும் மனிதனையும் பிரித்துப் பார்ப்பது அவசியம் என்றும், அவ்வாறு காணத் தவறுகிற பட்சத்தில் ஒவ்வொரு கல்லையும், மனிதனையும் சமமாக பார்க்கிற நேரிடும் என்றும் எழுதுகிறார். இந்தப் போக்கு இன்றும் தொடர்வதை நாம் காணமுடிகிறது. இயற்கையை வழிபடுகிற பொருளாக ஆராதிப்பது என்ற கண்ணோட்டமானது, இயற்கையை அழிக்கிற சக்திகளை காப்பதற்கே பயனளிக்கின்றன. ஜக்கி சாமியார் அதற்கொரு சிறந்த உதாரணம்.

**கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் மார்க்சும் எங்கெல்சும்:**

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் முதல் பகுதியானது, முதலாளியத்தின் பிரம்மாண்ட வளர்ச்சி குறித்த வரலாற்றை விளக்குவதாக இருக்கும். அதில், முதலாளிய சமூகமானது எவ்வாறு தனது பிரம்மாண்ட மூலதனக் குவிப்பால் கிராமத்தை நகரத்திற்கு அடிமையாக்கியது என மார்க்சும் எங்கெல்சும் விளக்கி

யிருப்பார்கள். இதற்கு முன்னரே இங்கிலாந்தில் தொழிலாளர் வர்க்கத்தின் நிலை என்ற நூலில், தொழில் நகரங்களில் எவ்வாறு காற்றோட்டம் இல்லாத அழுக்கடைந்த வீடுகளில் சுகாதாரக் கேட்டோடு தொழிலாளர்கள் வாழ்கிறார்கள் என எங்கெல்ஸ் எழுதியிருப்பார்.

நகரத்திற்கும் கிராமத்திற்குமான முரண்பாடு முதலாளிய சமூகத்தில் தீவிரம் பெறுவது குறித்தும், நகர்ப்புற தொழிலாளர்களும் கிராமப்புற விவசாயிகளும் எவ்வாறு பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர் என்றும் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் விளக்கப்பட்டிற்கும். கிராம மக்கள் உலகத் தொடர்பு அற்றவர்களாக, நகர மக்களை சுகாதாரக் கேட்டுடன் வாழ வைக்கிற இந்த அமைப்பின் முரண்பாடுகள் குறித்த மார்க்ஸ் எங்கெல்சின் விளக்கங்கள் நூற்றம்பைது ஆண்டுகள் கடந்தும் மிகப் பொருத்தமாக உள்ளன. இன்று நகரத்திற்கும் கிராமத்திற்குமான முரண்பாடு சூழலியல் சிக்கல்களின் மையக் காரணியாக மாறியுள்ளது குறிப்பிடத் தக்கது.

இவைகள் போக மால்தசின் மக்கள் தொகை கோட்பாடு மீதான மார்க்ஸ் எங்கெல்சின் விமர்சனம், பிரயுதானின் இயந்திர கதியான புரோமிதினியசம் மீதான மார்க்சின் விமர்சனம், முதலாளித்துவ விவசாயத்தின் மண் வளக் கொள்ளை குறித்த மார்க்சின் விமர்சனம் என பல எடுத்துக் காட்டுகளை நாம் இங்கு குறிப்பிடலாம். மார்க்ஸ் எங்கெல்சின் சூழலியல் மைய விவாதம் அனைத்தும் இயற்கையிலிருந்து மனிதன் அன்னியமாவது என்ற முரண்பாட்டை தீர்ப்பதை ஆதாரமாகக் கொண்டவை. அவ்வகையில் மார்க்சும் எங்கெல்சும் இப்புவியை முதலாளிய சமூகத்தின் காட்டுமிராண்டித் தன சுரண்டலில் இருந்து நம்மையும் இயற்கையையும் காத்துக் கொள்ள, கருத்தியல் ஆயுதம் வழங்கிய முதல் சூழலியல் முன்னோடிகள் ஆவார்கள்!

**ஆதாரம்:**


· https://www.marxists.org/reference/archive/mao/selected-works/volume-5/mswv5_51.htm

· https://www.marxists.org/reference/archive/mao/selected-works/volume-8/mswv8_64.htm

·https://monthlyreview.org/2015/06/01/late-soviet-ecology-and-the-planetary-crisis/

• மார்க்சும் சூழலியலும்—ஜான் பெல்லாமி பாஸ்டர், தமிழில் மு.வசந்தகுமார், விடியல் பதிப்பகம்.


●

நூல் அஞ்சல்

TO


சஞ்சிகை

மாத இதழ் | நவம்பர் 2017

www.sanjigai.wordpress.com


If undelivered, please return to:


G.Murugaraj,
12/6-2 Second Street
SVP Nagar, S.Alangulam
Madurai - 625017